# நூறு இராணுவத்தினர் பலி, 230 பேர் காயம்; பலாலி யுத்தம் பற்றி ஏஜென்ஸி செய்தி தகவல்

விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஐப்பசி: 5 ந: ஆகிர் பிறை: 2 இதழ்: 180
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 22-10-1990

(பாரிஸ்)

பலாலி, வசாவிளான், கட்டுவன், மயிலிட்டி பகுதியையொட்டி விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கடும் யுத்தத்தில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 230 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும், 30 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டதாகவும் ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து வெளியாகும் சுயாதீன செய்தி ஸ்தாபனங்களின் தகவல்களை ஆதாரம் காட்டி மேற்படி ஏஜென்ஸி செய்தி இத்தகவலை வெளியிட்டுள்ளது.

மேலும் பலாலி, வசாவிளான், கட்டுவன், மயிலிட்டி,

(4-ம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பிரதமர் பிரான்ஸ் பபணம்!

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்கா தலைமையிலான குழுவொன்று நேற்று பாரிஸ் சென்றுள்ளது.

இக்கூட்டத்தில் இலங்கை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அதிகநிதியை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை பிரதமர் விடுக்கவுள்ளார். (ச)

ஏழாவது நாளாக—

# மயிலிட்டி-காங்கேசன் வீதியில் கடும் மோதல் தொடர்கிறது

## சாந்தையில் இராணுவத்துக்கு பெரும்சேதம்

(காங்கேசன்துறை)

பலாலி முகாமிலிருந்து மயிலிட்டி பகுதி ஊடாக வெளியேறிய இராணுவம் காங்கேசன்துறை திஸவிகாரை முகாமை நோக்கிச் செல்ல முற்பட்டதையடுத்து மயிலிட்டி-காங்கேசன்துறை வீதியில் கடும் மோதல் தொடர்ந்து நடைபெறுகிறது. இதேவேளை சாந்தையில் புலிகள் மேற்கொண்ட ஆக்ரோஷ தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

மயிலிட்டியில் இருந்து வீமன்காமம் ஊடாக மாவிட்டபுரம் வரை முன்னேறிய ஸ்ரீலங்கா இராணுவம் நிலைகுலையும் விதத்தில் நேற்றுச் சாந்தைச் சந்தியில் புலிகள் ஆக்ரோஷமான தாக்குதலை மேற்கொண்டனர். இதில் படையினருக்குப் பெரும்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு யுத்தம் வெளிநாடுகள் அக்கறை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தொடர்ந்து நடைபெற்றுவரும் யுத்தம் குறித்து கொழும்பிலுள்ள பல வெளிநாட்டுதூதரகங்கள் பொதுமக்களின் உயிரிழப்புகள் மற்றும் சேதவிபரங்கள் குறித்து தகவல்கள் சேகரித்து வருகின்றன.

இத்தூதரகங்கள், சர்வதேச மன்னிப்புச் சபையுடனும், சுயாதீன செய்தி ஸ்தா

(4-ம் பக்கம் பார்க்க)

## நேற்று குடாநாட்டின் பல பகுதியிலும் அகோர வானத் தாக்குதல்

(காங்கேசன்துறை)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று அகோர ஷெல், பொம்மர், பீரங்கித் தாக்குதல் நடைபெற்றது. பல வீடுகள், கட்டடங்கள் கோயில்கள் சேதமடைந்தன.

சுன்னுகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பண்டத்தரிப்பு, கீரிமலை, சேந்தாங்குளம், சில்லாலை, விளான், அரியாலை, கைதடி உட்படப் பல பகுதிகளிலும் ஹெலி அகோரத் தாக்குதலை நடத்தியது.

சேந்தாங்குளம் கடற்பகுதியிலிருந்து ஏராளமான பீரங்கிக் குண்டுகளும் ஏவி விடப்பட்டன. இதனுல் இளவாலை, சேந்தாங்குளம், கீரிமலை, பன்ஞலை, கொல்லங்கலட்டிப்

(4ம் பக்கம் பார்க்க)

## அலுவலகங்கள் இயங்குகின்றன

(வவுனியா)

வவுனியா நகரிலுள்ள தபாற்கந்தோர் மீண்டும் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

வவுனியாவிலுள்ள வங்கிகள் யாவும் இயங்கத் தொடங்கியுள்ளன.

காலை 9 மணிமுதல் 10 மணிவரை வங்கிகள் இயங்குகின்றன. (153)

## நவ. 11ல் அமைச்சர் குஜ்ரால் கொழும்பு வருகிருர்

(கொழும்பு)

இலங்கை இனப் பிரச்சனை தொடர்பாகப் பேச்சுக்கள் நடாத்த, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் அடுத்த மாதம் 11ம் திகதி கொழும்பு வருகிருர்.

இத்தகவலை இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஹரோல் ஹேரத் நேற்று கொழும்பில் வெளியிட்

(4ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டம், புங்குடுதீவு, மண்டைதீவு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலையுடன் நீக்கப்பட்டதாக இலங்கை வானெலி அறிவித்தது. (ச)

## 'அமேசன்' நாளை புறப்படுகிறது

(கொழும்பு)

வடக்கு மாகாணத்துக்கு உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு 'அமேசன்' என்னும் கப்பல் நாளை கொழும்பிலிருந்து புறப்படவுள்ளது.

450 மெற்றிக் தொன் உணவுவகைகளை ஏற்றிக்கொண்டு புறப்படவிருக்கும் இக் கப்பல் புதன்கிழமை அளவில் பருத்தித்துறையை வந்தடையக்கூடுமெனக் கூறப்படுகின்றது. (வி)

## புதிய தாக்குதலுக்கு திட்டம்

(கொழும்பு)

யாழ் நகர்மீது புதியமுறையிலான தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கான வழிவகைகளை தற்போது இராணுவ வட்டாரங்கள் வகுத்து வருவதாக, இலங்கை பாதுகாப்பு அமைச்சு நேற்று கொழும்பில் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. (வி)

## அப்பாவிகள்மீதுகுண்டுவீச்சு இந்தியா ஆழ்ந்த கவலை

புதுடில்லி)

வடபகுதியில் நடைபெற்றுவரும் கடும் யுத்தத்தில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதும். அவர்கள் குடியிருப்புகள் குண்டு வீசி அழிக்கப்படுவதையுமிட்டு இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சு நேற்றுத் தனது கவலையை வெளியிட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு—கிழக்கில் இராணுவ நடவடிக்கை கி. ஐரோப்பிய தமிழர் கவலை

(கொழும்பு)

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கையினுல் ஆழ்ந்த கவலையும் துயரமும் கொண்டுள்ளனர்.

இங்கு நடைபெறும் இரா

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் கடும் மோதல் இராணுவம் பின்வாங்கியது

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று வெளியேற முற்பட்ட சிங்கள இராணுவத்தினர். விடுதலைப்புலிகளின் கடுமையான தாக்குதலை சமாளிக்க முடியாத நிலையில் மீண்டும் முகாமுக்குள் சென்றனர்.

நேற்றுக்காலை 10-30 மணிக்கு ஆனையிறவு இராணுவத்தினர் பெருமளவில் வாகனங்கள் சகிதம் வெளியேற முற்பட்டபோது விடுதலைப்புலிகள் அவர்கள்மீது கடும்தாக்குதல்களை மேற்கொண்டனர். இம் மோதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இராணுவத்தினர் பின்வாங்கி முகாமுக்குள் சென்றனர்.

மேற்படி மோதலில் விடுதலைப்புலிகளின் தரப்பில் அப்பன் (பலா) என்னும் போராளி வீரமரணம்அடைந்ததாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

# “ரேகணுவை சிறைமீட்க சென்றவர்கள் அந்த சிறையிலேயே சிக்கிவிட்டனர்!”

**1965**ம் ஆண்டு யாழ் கோட்டையிலுள்ள சிறைக் கூடங்களையும் அங்கு சிறை வைக்கப்பட்டிருக்கும் கைதிகளையும் நேரில் பார்வையிட கொழும்பிலிருந்து பொது ஸ்தாபனம் ஒன்றின் பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர்களுடன் பத்திரிகையாளரும் சென்று பார்வையிட்டனர்.

ஈழநாடு சார்பில் நானும் வீரகேசரி சார்பில் எஸ். செல்லத்துரையும் சென்றிருந்தோம். லயன்ஸ்கழக பிரதிநிதிகளோ அல்லது ரோட்டறிக் கழக பிரதிநிதிகளோ தான் வந்திருக்கவேண்டும். சரியாக ஞாபகமில்லை.

நாங்கள் சிறைச்சாலைக்குச் சென்றபோது சிறைச்சாலை அதிபர் வரவேற்ருர். பிரதம சிறைச்சாலை அதிகாரி எங்களை உள்ளே அழைத்துச்சென்று ஒவ்வொரு பகுதியாக கூட்டிச் சென்ருர்.

## முற்றுகச் சேதம்

அப்போது நான் பார்த்த சிறைச்சாலையா இது என்ற விதத்தில் உருத்தெரியாமல் முற்றுக சேதமடைந்திருந்தது.

பயங்கர கேடியான ‘கியூ ரெக்ஸ் பியதாசா’ சிறை வைக்கப்பட்டிருந்த மண்டபம், சுவர்கள் இடிந்த நிலையில் கூரைகள் பிரிந்திருந்தன. அவருடன் வேறுசில கைதிகளும் அங்கு இருந்தனர். அநேகமாக எல்லாரும் சிங்களவர்கள்தான். கொலை கொள்ளை சந்தேகநபர்கள் அவர்கள். சில பேருக்கு தீர்ப்பு வழங்கி தண்டனையும் அனுபவித்துக்கொண்டிருந்தனர்.

விளக்கமறியல் கைதிகள் இருந்தபகுதியும் முற்றுகச் சேதமடைந்திருந்தது. பால்ய குற்றவாளிகள் பிற்பகுதியில் ஒரு பகுதியில் அப்போது சிறை வைக்கப்பட்டிருந்தனர். அதுவும் முற்றுக சேதமடைந்திருந்தது. பெண்களுக்கான சிறைப்பகுதியும் சேதமடைந்திருந்தது.

## ஆலயங்கள் சேதம்

அங்குள்ள சைவாலயம், தேவாலயம் கூட சேதமடைந்திருந்தது. கிணற்றுநீர் தெளிவாக சுத்தமாக இருந்தது.

## கோட்டைச் சிறைக்குள் தியாகி சிவகுமாரனை தாக்க நடந்த முயற்சி!

வரிசையாக பல சிறியஅறைகள், கூரையற்ற நிலையில் காணப்பட்டது. முன்பு இங்கெல்லாம் தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த அந்த சிறிய அறைப்பகுதிகளையே காணவில்லை, புலிகளின்ஷெல் தாக்குதலினுல் முற்றுகச் சேதமடைந்திருந்தது.

## இராணுவம் இல்லை

அப்போதெல்லாம் கோட்டையில் இராணுவம் குடிகொண்டிருக்கவில்லை. பொலிஸ் காவலும் இல்லை. சிறைச்சாலை வாசலில் தான் சிறைக்காவலாளிகள் இருப்பார்கள். கைதிகள் தப்பிச் செல்லாமல் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

கோட்டைக்குள் எந்நேரத்திலும் யாரும் செல்லலாம். ஆனால் சிறைச்சாலைப்பகுதிக்கு மட்டும் செல்லமுடியாது.

கோட்டையில்உள்ள மைதானத்தில் பல விளையாட்டுப் போட்டிகளும் அக்காலத்தில் நடந்திருக்கிறது. பிரபல கோஷ்டிகள் எல்லாம் இந்த மைதானத்தில் மோதியிருக்கின்றன. வெளிநாட்டுகுடிவகை ‘பார்’ ஒன்றும் இருந்திருக்கிறது.

கோட்டைக்குள் இருக்கும் தேவாலயத்திற்கு வெளியிலிருந்து சென்று பலர் வழிபாட்டிலும் ஈடுபடுவதுண்டு.

காலையில் சிறைச்சாலையில் கைதிகளையும் விளக்கமறியல் கைதிகளையும் சந்திப்பதற்கு குடும்ப உறுப்பினரும் உறவினரும் நண்பர்களும் செல்வது வழக்கம். சிலர் கைதிகளுக்கு சாப்பாடு எடுத்துச் செல்வதும் உண்டு. சந்திக்கும் போது பீடி, சிகரெட் கைமாறுவதும் உண்டு.

சிறைவாசலில் உள்ள அதிகாரியின் அனுமதி பெற்று உள்ளே சென்று கைதிகளை சந்திக்கலாம். எவ்வித கட்டுப்பாடும் இருக்காது.

## ஜே. வி. பி தலைவர்

1971ம் ஆண்டு ஏப்பிரல் 5ம் திகதி கோட்டை மைதானத்தில் ‘யேசுவின் திருப்பாடுகள் காட்சி’ நடைபெற்றது. பெருந்திரளான கூட்டம் அச்சமயம் ரேகன விஜயவீராவை கோட்டை சிறைச்சாலையில்காவலில் வைத்திருந்தனர். ஆனால் இது பற்றி வெளியில் எவருக்குமே தெரியாது. ரேகணுவை சிறைமீட்பதற்காக தென்னிலங்கையிலிருந்து ஜே. வி. பி. உறுப்பினர்கள் இருபஸ்களில் இங்கு வந்திருந்தனர் பஸ்களை தூரத்தில் நிறுத்திவிட்டு அவர்களும் வந்து முற்றவெளியில் நடந்த திருப்பாடுகள் காட்சியில் சேர்ந்து கொண்டார்கள்.

சிறிது நேரத்தின் பின் அவர்கள் ஒருவர்பின் ஒருவராக கோட்டைக்குள் சென்ருர்கள். அப்போது கோட்டையில் இராணுவம் இருக்க

**கா. யோகநாதன்**

வில்லை வாசலில் காவலும் இல்லை நேராக தேவாலயத்திற்கு அருகில் சென்று படிகளால் ஏறி மேல் தளத்திற்கு சென்று ரேகணுசிறைவைக்கப்பட்டிருக்கும் பகுதிக்கு வந்துவிட்டார்கள். ரேகணு சிறை வைக்கப்பட்டிருக்கும் இடம் பற்றி அவர்கள் முன்னரே தெரிந்திருக்கவேண்டும்.

கோட்டை சிறைச்சாலை பகுதிக்குள் உள்ள தேவாலயத்திற்குள் உள்ள பின் பகுதியில் அவர் சிறைவைக்கப்பட்டிருந்தார். அந்த பகுதியும் முற்றுக சேதமடைந்திருந்தது.

அப்பகுதிக்கு மேலே இருந்து கைக்குண்டுகளை வந்தவர்கள் கோட்டைக்கு வெளிப்புறத்தில் வீசியிருக்கிருர்கள். அப்போது அங்கு பணியாற்றிய பிரதம சிறையதிகாரி பாஸ்கரலிங்கம் மெயின் ‘சுவிச்’சை அணைத்துவிட்டார், எங்கும் இருட்டு வந்தவர்கள் இடம் தெரியாமல் தடுமாறி தத்தளித்தனர்.

## பொலிஸ் கோஷ்டி

கோட்டைக்கு அருகிலுள்ள பொலிஸாருக்கு உடனடியாக தகவல் கிடைத்தது. ஆயுதந்தாங்கிய பொலிஸ் கோஷ்டி கோட்டைக்குள் வந்தது.

அப்போது கடமையாற்றிய பொலிஸ் அதிபர் திரு. எஸ். சுந்தரலிங்கம் எல்லாரையும் உயிருடன் கைது செய்யுமாறு பணித்திருந்தார். ஆனால் மின்சாரம் தடைப்பட்டதால் அந்த சுற்றி வளைப்பில் இரண்டொரு இளைஞர் பலியானுர்கள் மற்றையோர் கைதானுர்கள்.

கோட்டையை உடைத்து தங்கள் தலைவரை மீட்க ஜே. வி. பி யினர் எடுத்த முயற்சிகைகூடவில்லை. தோல்வியில் முடிவடைந்தது.

இதனை அங்கு 10 வருடமாக பணியாற்றிய சிறைக் காவலாளி ஒருவர் அண்மையில் என்னிடம் தெரிவித்தார்: இப்படி கோட்டை சிறைச்சாலையைச் சுற்றியே எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

## தியாகி சிவகுமாரன்

தியாகி சிவகுமாரன் கூட இங்கு 5 வாரங்கள் வரை விளக்க மறியலில் சிறை வைக்கப்பட்டிருந்தார். முன்னுள் உதவி அமைச்சர் சோமவீர சந்திரசிறியின் காருக்குக் குண்டு வைத்தார் எனச் சந்தேகத்தின்பேரில் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். பின்னர் விடுதலையானுர்.

சிறைச்சாலையில் ஒரு அறையில் அவருடன் சில சிங்களக் கைதிகளும் இருந்தனர். அப்போது அன்றைய சப் இன்ஸ்பெக்டர் வாரனேட் அந்தச் சிங்களக் கைதிகள் மூலம் சிவகுமாரனைத் தாக்குவதற்குத் திட்டமிட்டதாகவும், பின்னர் பொலிஸ் அதிபர் திரு. சுந்தரலிங்கம் இதனை அறிந்து சிவகுமாரனை வேறு பகுதிக்குத் தமிழ் கைதிகள் இருந்த இடத்திற்கு மாற்ற ஏற்பாடு செய்ததாகவும் அக்காலத்தில் ஒரு கதை புலமாக அடிபட்டது என் நினைவுக்கு வருகிறது.

ரேகண விஜேவீரா சிறை வைக்கப்பட்டிருந்த பி-1 பகுதியில் 10 அறைகளும், எதிரில் பி-2 பகுதியில் 10 அறைகளும் அப்போது இருந்தன. ஆனல் இப்போது விடுதலைப் புலிகளின் தாக்குதலினுல் அந்த அறைகளின் சுவர்களும், கூரைகளும் உடைந்து சேதமுற்றிருந்தன, முன்பு இருந்த பகுதிகளை எவை எனக்கண்டு பிடிப்பது கஷ்டமாக இருந்தது.

1971-ம் ஆண்டளவில் இச் சிறைச்சாலையில் 41 ஜே. வி. பி. யினர் சிறை வைக்கப்பட்டிருந்தனர் அவர்கள் தும்பில் இருந்து கயிறு திரிக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். அப்போது அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கயிற்றைச் சேமித்து மறைத்து வைத்து நீளமாகத் திரித்த அக்கயிறு மூலம் கோட்டை மதிலேறித் தப்பிச்சென்றுவிட்டனர். பின்னர் பிரதம சிறை அதிகாரி திரு. பாஸ்கரலிங்கம் தலைமையில் பொலிஸ் உதவியுடன் சென்ற சிறைக்காவலாளிகள் அவர்களை நகரில் கைது செய்து சிறைவைத்துவிட்டனர்.

இந்தச் சிறைச்சாலையின் ஒவ்வொரு பகுதியையும் பார்வையிட்டபோது, இங்கு சிறையிலிருந்தவர்கள் பற்றிய நினைவு என் மனத்திரையில் நிழலாடின.

நேரம் நண்பகலைக் கடந்து வெகுநேரமாகிவிட்டது. சிறைச்சாலைப் பகுதியிலிருந்து வெளியேறி ஆலயத்திற்கு அருகாக உள்ள வாசலினுல், சிறைச்சாலை அதிபர் விடுதிப் பகுதிக்குச் செல்கின்ருேம்.

சிறைச்சாலை அதிபர் விடுதிக் கட்டடங்கள் யாவும் முற்றுகச் சேதமடைந்திருந்தன. அங்கு பெரியோர், இளைஞர்கள் விடுதலைப் புலிகளின் ஷெல் தாக்குதலினுல் இடிந்து சேதமுற்ற கட்டடப் பகுதிகளை கயிறு கட்டி வீழ்த்தி அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர்.

(தொடரும்)

## யாழ். கோட்டைக்குள் 3 மணி நேரம் - 7

---

# பாடவிதான மீள்ஒழுங்கு ஆலோசனைக் கூட்டம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் இவ்வாண்டுக்கான பாடவிதானங்களை மீளஒழுங்கு செய்வது, வகுப்பேற்றப் பரீட்சைகளை நடாத்துவது சம்பந்தமான யாழ். மாவட்ட சேவைக்கால ஆலோசகர்கள் விசேட கூட்டம், இம்மாதம் 24ந் திகதி நல்லூர் சாதனு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

தூர இடங்களில் உள்ள ஆலோசகர்கள், 23ந் திகதி செவ்வாய்க்கிழமையன்று யாழ் நகரில் தங்கி, மறுநாள் இக்கூட்டத்திற்குத் தவருது கலந்துகொள்ளவேண்டும். வரத் தவறுவோரின் இடத்திற்குப் புதிய சேவைக்கால ஆலோசகர்கள் நியமிக்கப்படுவார்கள். விசேட கல்வி அதிகாரிகளும் இக்கூட்டத்திற்குத் தவருது வருகை தருதல்வேண்டும் என்றும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

விசேட பாடவிதான செயலமர்வுகள் 26ந் திகதி தொடக்கம் ஒரு வாரத்திற்கு யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என்றும், பங்குகொள்ளும் ஆலோசகர்களுக்கு வதிவிட வசதிகளும் செய்துகொடுக்கப்படும் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவுக்கு 360 தொன் உணவு பொருட்கள்வந்தது

(ஒட்டுசுட்டான்)

கொழும்பிலிருந்து ‘வின்கோறேடர்’ என்னும் கப்பல் மூலம் 360 தொன் உணவுப் பொருட்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வந்துள்ளது.

கப்பலில் இருந்து பொருட்களை இறக்குவதற்கு முல்லை அரச அதுபர் திரு. க. பொன்னம்பலம் உ. அ. அதிபர் வே. கந்தசாமி ஆகிய இருவரும் துரித நடவடிக்கை எடுத்துவருகிருர்கள்.

கப்பலில் வந்த பொருள்கள் 200 தொன் அரிசி, சீனி, பருப்பு, தேயிலை என்பன அடங்கும்.

இறக்கப்பட்டு வரும் பொருட்கள் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு முழுமையாக பங்கீடு செய்ய போதாது என தெரிவிக்கப் படுகிறது.

# உணவுப் பொருள்கள் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

உணவுப்பொருட்களின் விலை அதிகரித்து வருவதால் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழைகாரணமாக உணவுப்பொருள் வருவதில் தடை ஏற்பட்டுள்ளதால் வடபகுதிக்கு தனியார் துறையினர் உணவுப்பொருள் எடுத்துவர முடியாத சூழ்நிலை தோன்றியுள்ளது,

இதனுல் உணவுப்பொருட்களின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பதினெட்டு ரூபாவாக விற்பனைசெய்யப்பட்ட கோதுமைமா இருபத்திநாலு ரூபாவாகவும், சீனி முப்பத்திநான்கு ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோன்று ஏனைய உணவுப் பொருட்களின் விலைகளும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

முட்டையின் விலையும் நான்கு ரூபாவாக அதிகரித்துள்ளது. கோழித்தீனுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்குக்காரணம் எனக்கூறப் படுகிறது.

தேங்காயின் விலையும் 10 ரூபா முதல் 12 ரூபா வரை அதிகரித்துள்ளது.

# மிதிவெடியில் மாடு சிக்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ். பாசையூர் சந்தைக்கு அருகாமையிலுள்ள கடற்கரைபகுதியில் நேற்றுக் காலை மாடு ஒன்று மிதி வெடியில் அகப்பட்டு காலை இழந்துள்ளது:

# கூட்டுப் பசளை செய்கை

(வடமராட்சி)

கூட்டுப்பசளை செய்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வட.கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட பொருளாதாரத் தடை காரணமாக விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள்.

இதன்காரணமாக பசளை முதல் தானியவகை வரை பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை ஈடுசெய்யும் விதத்தில் வடமராட்சி விவசாயிகள் மீண்டும் பழைய முறையிலான இலை, குழை, பனை ஓலை போன்றவற்றைக் கூட்டுப் பசளையாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்கள். 51))


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அதி சிறந்த இன தோடம் கன்றுகள் ஒரு வருடத்தில் பலன்தரக்கூடியன விற்பனைக்கு உண்டு. ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்துங்கள். பகல் 12 மணிக்குப்பின் தொடர்பு கொள்ளவும். பொ. துரை ஐயா, நிலாவரையடி, நவகிரி, புத்தூர். (சி-4116)

## பீற்றூட் கிழங்கிலிருந்து மதுசாரம் வடிப்பு

(புலோலி)
யாழ். மாவட்டத்தில் பீற்றூட் கிழங்கிலிருந்து தற்போது மதுசாரம் வடிக்கப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் ஆங்காங்கே உள்ள பனை அபிவிருத்திச்சபை வடிசாலைகளில் இம்மதுசாரம் வடிக்கப்பட்டு வருகிறது

இதற்கென பெருந்தொகையான பீற்றூட் கிழங்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது இதனால் பீற்றூட் கிழங்கின் விலையும் அதிகரித்துள்ளது. (61)

### சேவைக்காலப்பணம்
## தாமதப்படுத்தினால் தண்டம் வழங்கப்படும்

(கொழும்பு)
தனியார்துறை ஊழியர்கள் தமது சேவையில் இருந்து விலகும்போது அவர்களுக்குரிய சேவைக்கால பணத்தை வழங்க தாமதப்படுத்தும் முதலாளிமார்களுக்கு எதிராக தண்டம் விதிப்பதற்கு தொழில் சட்டமூலங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இத்தகவலை தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் எம். பிரேமசந்திர தெரிவித்துள்ளார். அவர் மேலும் தகவல் தருகையில் சேமலாப நிதிக்கு பதிலாக சகல ஊழியர்களுக்கும் எதிர்காலத்தில் சமூக பாதுகாப்பு பென்ஷன் திட்டமொன்றும் அமுல்படுத்தப்படவிருப்பதாகத் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## சுன்னாகம் நகர்ப்பகுதி வெறிச்சோடிக்கிடக்கிறது!

(காங்கேசன்துறை)
அண்மைக்காலமாக வியாபாரமையமாகவிளங்கிய சுன்னாகம் நகர்ப்பகுதி வெறிச்சோடிக்காணப்படுகிறது.

யாழ். நகர அசம்பாவிதங்களையடுத்து சுன்னாகத்திலேயே மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளுமளவிற்கு வர்த்தக நிலையங்கள் இயங்கிவந்தன.

கடந்த இருதினங்களாக நடந்த விமானக்குண்டுத்தாக்குதலையடுத்து சுன்னாகம்நகர்ப்பகுதி வெறிச்சோடிக்காணப்படுவதுடன் அங்கிருந்து பொதுமக்களும் வெளியேறியுள்ளனர்.

சுன்னாகம், வாழைக்குலை சந்தையில் குண்டுத்தாக்குதலினால் இறந்தவர் ஒரு தொழிலாளி என அடையாளம் காணப்பட்டுள்ளார். (86)

### மலையக இளைஞர்களை
# முப்படையில் சேருமாறு அமைச்சர் ரஞ்சன் அழைப்பு!

(கொழும்பு)
மலையக இளைஞர்களை இலங்கையின் முப்படைகளிலும் சேருமாறு பாதுகாப்பு இணைஅமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன அழைப்பு விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பொலிஸ் நேர்முகப் பரீட்சைக்கு பெருந்தொகையான மலைநாட்டு இளைஞர்கள் விண்ணப்பித்திருந்தார்கள் இவர்களில் 150 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேபோன்றுதரைப்படை, விமானப்படை, கடற்படை ஆகியவற்றிலும் சேரும்படியும் எமது அழைப்பை ஏற்றுமேற்படி படைகளில் சேர முன்வரும் மலையக இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வி)

### கொழும்பிலுள்ள
# தமிழ் அகதிகள் முகாமிற்கு ஜனாதிபதி பிரேமா விஜயம்

(கொழும்பு)
கொழும்பிலுள்ள தமிழ் அகதிகள் முகாமிற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா நேற்று முன்தினம் நேரில் விஜயம்செய்து அகதிகளுடன் உரையாடினார்.

அகதிமுகாமில் நிலவும் இடநெருக்கடி சுகாதாரச் சீர்கேடு குறித்து ஜனாதிபதியிடம் அகதிகளினால் எடுத்துக் கூறப்பட்டது.

அகதிகள் பிரச்சனைகளைக் கேட்டறிந்த ஜனாதிபதி. முகாமில் நிலவும் குறைபாடுகளை உடன் தீர்த்து வைப்பதாக உறுதிமொழி வழங்கினார்.

ஈழம் புரட்சிகர ஜனநாயக கட்சித் தலைவர் திரு. டக்ளஸ் தேவானந்தா அண்மையில் ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்து கொழும்பிலுள்ள அகதிகள் குறித்து உரையாடியதையடுத்தே ஜனாதிபதி இம்முகாமிற்கு விஜயம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

### ஆறுபேர் படுகாயம்

[மன்னார்]
தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து கடந்த 17ம் திகதி காலையில் மேற்கொள்ளப்பட்ட ஆட்டிலறி ஷெல் தாக்குதலினால் தாழ்வுபாடு பகுதியைச் சேர்ந்த 6 பேர் படுகாயம் அடைந்தனர். [வி]

### அதிகாரப் பரவலாக்கல்
## அரசியல் கட்சிகள் கூட்டம் 26-ம் திகதி நடைபெறும்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைத்து அதிகாரப்பரவலாக்கலை வழங்குவது சம்பந்தமான மற்றுமொரு அரசியல் தலைவர்களின் கூட்டமொன்று இம்மாதம் இருபதாறும் திகதி நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கானஅழைப்புகளை ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அரசியல்கட்சிகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

23 பதிவுசெய்யப்பட்டகட்சிகளின் அரசியல்தலைவர்களுக்கு இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (ச)

### மாகாணசபை ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு கிழக்கு மாகாண சபை அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடந்த ஆனிமாதச்சம்பள முற்பணமாக ஆயிரம் ரூபாவும் ஆடிமாத முழுச்சம்பளமும் வழங்கப்பட்டுள்ளது.

### இராசி பலன்

திங்கட்கிழமை

22 - 10 - 1990

சதுர்த்தி பி. இ. 3-10வரை; அஞஷம் பி. ப. 3-10 வரை; சித்தயோகம்; இராகுகாலம் காலை 7-32 முதல் 1.02வரை, நல்ல நேரம் 12-02 முதல் 1-32 வரை.

மேடம் - காரிய தாமதம், பொருட்செலவு, அநாவசிய தலையீடு, தொழில் மந்தம்.

இடபம் - தொழில் லாபம், குடும்ப மகிழ்ச்சி, போனவர் திரும்பி வருவார், பயணங்களில் நன்மை.

மிதுனம் - விவேகமான செயல், கடன்வரவு, பெண்வழி உதவி, புதிய நட்பு, மகிழ்ச்சி.

கடகம்-எதிரிகள் தொல்லை, ஏமாற்றம், பணவகைதகராறு குடும்பப்பிரிவு, மனச்சுமை.

சிங்கம்-மனப் போராட்டம், எதிர்பாராதகவலை, பணவரவு, குடும்பத்தில் சச்சரவு, தொழில் போராட்டம்.

கன்னி - பயனற்ற செயல். தொழில் பாராட்டு, சகோதர உதவி, மனைச் சிறப்பு, ஆலய தரிசனம்.

துலாம் - அந்நிய வாசம், கருத்து முரண்பாடு, சிநேகிதர் உதவி, வாக்குக் கலகம்.

விருச்சிகம் – காரியவெற்றி, பகை விலகும், நல்லோர் சந்திப்பு, அதிகாரிகள் பாராட்டு.

தனுசு – வைத்தியச்செலவு, பொதுப்பணி, குடும்ப மனஸ்தாபம், புத்திரர் கவலை.

மகரம்-புதிய சிந்தனை, தொழில் லாபம், சொத்துப் பிரச்சனை. தாய்வழி உதவி.

கும்பம் - விரக்தியடைதல். பயணங்களால் அலைச்சல், அந்நியர் சகாயம், எதிர்பாராத செய்தி.

மீனம்–கண்ணில் ரோகம், குடும்பப் பிரிவு. பணக்கவலை, தொழில் பாதிப்பு.

ஜோஸ்யர்.

### தூக்கிலிட்ட நிலையில்
# குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
தூக்கிலிட்டு தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

கைதடி தெற்கினைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ். முருகையா (37 வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்,

கைதடி - கண்டிவீதியில் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ஒரு கட்டிடத்தில் மர்மமான முறையில் தூக்கிலிட்டுத் தொங்கியவாறு இவரது சடலம் காணப்பட்டது.

## இந்திய கடற்படைக்கு நவீன தொடர்பு நிலையம்

(சென்னை)
இந்தியாவின்கடற்படையை நவீனமயப்படுத்தும் திட்டத்திற்காக அதிநவீன தகவல் தொடர்பு நிலையமான ''ஸ்கைலாக்கை'' நேற்று முன்தினம் இந்திய ஜனாதிபதி ஆர், வெங்கட்ராமன் சென்னை விஜய நகர கடற்படைத்தளத்தில் ஆரம்பித்துவைத்தார்.

ஆசியாவில் அதிசிறந்த தகவல் பரிமாறும் நிலையமாக இது செயல்படவிருப்பதால் உலகில் கடற்படை வசதிகள் நிறைந்த ஐந்தாவது வல்லரசாக இந்தியாவிருப்பது தெரிந்ததே.

நூற்றி இருபத்திரெண்டு கோடி ரூபா செலவில் அமைந்துள்ள இந்நிலையத்திற்கு வீரபாண்டிய கட்டப்பொம்மன் நினைவாக ஐ. என் எஸ் கட்டப்பொம்மன் தகவல்நிலையமென பெயர் சூட்டப்பட்டுள்ளது.

குறைந்த அலைவரிசைகளைக் கொண்ட இந்நிலையத்தினூடாக கடற்படை நடவடிக்கைகளை வலுவூட்ட கூடியதாக இருக்குமென பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ராஜாராம் தெரிவித்துள்ளார். (ச)

### இன்று மினிபஸ் சங்கக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் உள்ள சகல மினிபஸ் சங்கங்களின் தலைவர்களையும், செயலாளர்களையும்இன்று நல்லூர்சாதனா பாடசாலையில் நடைபெறும் கூட்டத்துக்குசமூகம்கொடுக்குமாறு வடபிராந்திய மினிபஸ் சேவைச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி கூட்டம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

### பேராதனை பட்டமளிப்பு விழா

(கண்டி)
பேராதனைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா டிசம்பர் மாதம் இருபத்திரெண்டாம் திகதி நடைபெறவுள்ளது.

85 – 87-ம் ஆண்டு கல்வியாண்டை ஆரம்பித்தவர்கள் அனைவரும் பட்டங்களைப் பெறுவதற்கு தமக்கான விண்ணப்பங்களை பதிவாளருக்கு சமர்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். [ச]

### யாழ். நகரப் பகுதியில் ஹெலி நோட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரப்பகுதியை சுற்றி நேற்று முன்தினம் ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டது.

பலாலியிலிருந்து வந்த இந்த ஹெலிகொப்டர் இருதடவைகள் சுற்றி வட்டமிட்டபின்னர் மீண்டும் பலாலி நோக்கிச்சென்றது.

### தேர்முட்டியிலிருந்து தவறி வீழ்ந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)
புருப்பிடிக்கத் தேர்முட்டியில் ஏறிய ஒருவர் தவறிக் கீழே வீழ்ந்து படுகாயம் அடைந்தார்.

கோண்டாவில் உப்புமடம் பிள்ளையார் கோவிலில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொக்குவிலைச் சேர்ந்த அப்புத்துரை ஜீவா (வயது 15) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார். (56)

## இடம்பெயர்ந்தவர் கடை பீப்பாக்குண்டினால் சேதம்

(காங்கேசன்துறை)
தெல்லிப்பழையிலிருந்து இடம்பெயர்ந்து மல்லாகத்தில் வியாபாரம் செய்து வந்தவரது வியாபாரநிலையம். பீப்பாகுண்டு தாக்குதலால் பெரும் சேதமடைந்தது.

தெல்லிப்பழையில் கடை வைத்திருந்த ஆறுமுகம் என்பவர் மல்லாகத்திற்கு இடம் பெயர்ந்து அங்கு கடை வைத்திருந்தார்.

மல்லாகம் பெற்ரோல் நிலையத்திற்கருகில் விழுந்த பீப்பா குண்டினால் இவரது கடை தரைமட்டமானது. (86)

## அறவழி நூலக சேவைக்கு பொதுமக்கள் பாராட்டு

(யாழ்ப்பாணம்)
அறவழிப் போராட்டக்குழுவினால் நடத்தப்படும் கைதடி நுணாவில் பகுதியிலுள்ள பொதுநூலகம் சிறுவர் நூலகம் ஆகியவற்றின் சேவைக்கு பொதுமக்கள் பலர் பாராட்டுத்தெரிவித்துள்ளார்கள்.

இந்நூலகத்தின் முதலாவது ஆண்டுப் பூர்த்தியையொட்டி அறவழிப் போராட்டக்குழுவினால்ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நூலகசேவை அபிப்பிராய வாக்கெடுப்பின்போது பலர் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

நெருக்கடியாக காலகட்டத்தில் அரும்சேவையாற்றியமை குறித்து பலர் கடிதம் மூலம் தமது பாராட்டுதலை தெரிவித்துள்ளனர்.

# கொழும்பில் அகதிமுகாமிலுள்ள தமிழரை திருப்பி அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ள தமிழர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3,000ற்கும் மேற்பட்ட தமிழர்கள் இந்த அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளனர். சுகாதார மற்றும் அடிப்படை வசதிகள் இன்மையால் இந்த முகாமிலுள்ள தமிழர்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளார்கள்.

ஜனாதிபதி திரு. பிரேமதாசாவின் விசேஷ ஏற்பாட்டில் இந்த அகதிகளை சொந்த இடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச.வி.து)

# மடு அகதிமுகாமுக்கு லொறிகள் மூலம் உணவு

(கொழும்பு)

மடுத்தேவாலயத்திலிருக்கும் பெரும் தொகையான அகதிகளுக்கு உணவுப்பொருட்களை ஏற்றிக்கொண்டு ஐந்து லொறிகள் இன்று கொழும்பிலிருந்து புறப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பாதுகாப்பில் இயங்கி வரும் மேற்படி அகதிமுகாமுக்கு உணவுப்பொருட்கள் கொண்டு செல்லப்படுவது இது இரண்டாவது தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமிற்குள் சென்ற இராணுவத்தினர் பலருக்கு இம்மோதலில் படுகாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி)

# தமிழ் இளைஞர்கள் படும் இன்னல்

(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெற்று வரும் இராணுவத் தாக்குதலை தொடர்ந்து வெளிநாடு செல்வதற்காக கொழும்பு சென்ற தமிழ் இளைஞர்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள்.

லட்சக்கணக்கான ரூபாய்களை ஏஜென்ஸிகளிடம் கொடுத்தபோதும் இன்று அல்லது நாளை அனுப்புவதாக ஏமாற்றி வருகிறார்களாம். இதனால் அங்குள்ள 'லொட்ஜ்'களிலும் தனியார் வீடுகளிலும் விரக்தியடைந்த நிலையில் தமிழ் இளைஞர்கள் வாழ்ந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞர்கள் வெளியில் நடமாடமுடியாத நிலையில் மேற்குறிப்பிட்ட இடங்களில் முடங்கிப்போயிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளியில் இவர்கள் நடமாடத்தொடங்கும் போது பொலிஸாரால் கைதுசெய்யப்படுகிறார்களாம். சில இளைஞர்கள் பலதடவை இவ்வாறு கைதுசெய்யப்பட்டு விடுதலையாகியுள்ளனர்.

இந்நிலையில் வெளிநாடு செல்ல முடியாது, தமது சொந்த இடங்களுக்கும் திரும்பமுடியாத நிலையில் தமிழ் இளைஞர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்துவருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (து

# கள் விற்பனையை நிறுத்தி சீனி உற்பத்திசெய்ய முடிவு!

(ஒட்டுசுட்டான்)

வடபகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் அடுத்த ஆண்டிலிருந்து கள் விற்பனையை நிறுத்தி சீனி உற்பத்தியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கள்ளிலிருந்து பதநீர் உற்பத்தியைக் கூட்டி சீனி உற்பத்தி செய்யப்படவுள்ளது.

கள்ளிலிருந்து முதல் வடியில் கல்லாக்காரம், இரண்டாவது வடியில் சீனியும் எஞ்சிய பாணிக் கழிவில் மொலகரிஸ் (சாராயம்) வடிக்கப்படும்.

இதனால் வடபகுதியின் சீனி தேவையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்ய முடியுமென வடமாகாண தெ. ப. பொ. உ. கூ. சங்கங்களின் ஆணையாளர் திரு. எஸ். சபாரத்தினம் தெரிவித்தார். (144)

# மடுவில் 15,000 அகதிகள்

(மன்னார்)

மடு அகதிகள் முகாமில் 15 ஆயிரம் தமிழ் அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் பொறுப்பேற்று நடத்தும் இம்முகாமில் உள்ளவர்களுக்கு மேற்படி நிறுவனத்தினால் உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டது.

# அனாதை இல்ல கட்டிடம் மீதும் பொம்மர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் நேற்று நண்பகல் நடைபெற்ற மூர்க்கத்தனமான பொம்மர், ஹெலி தாக்குதலினால் சைவ அனாதை இல்ல முன் பகுதிக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்தது.

இப்பகுதியை பல தடவைகள் வட்டமிட்ட பொம்மர் விமானம் தாழப்பறந்துவந்து அடுத்தடுத்து குண்டுகளை வீசியது.

இக்குண்டுகள் பாரிய சத்தத்துடன் வெடித்து சிதறியதாகவும் குண்டுகளின் சிதறல்கள் சில மைல்கள் தொலைவில் வீழ்ந்ததாகத் தெரிகிறது.

சிறிதுநேரத்தில் ஹெலிகொப்டர் ஒன்று இப்பகுதிக்கு வந்து பல தடவைகள் துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்தது.

இத்துப்பாக்கி வேட்டுக்களினால் வீடுகள், கட்டடங்கள் என்பன சேதமடைந்ததாகத் தெரிகிறது. (க

# சைக்கிள் டைனமோ மூலம் வானொலி கேட்போர் அதிகரிப்பு

(மானிப்பாய்)

சைக்கிள் டைனமோ மூலம் வானொலிகேட்போர் தொகை அதிகரித்துவருகிறது.

மின்தடை காரணமாகவும், கொழும்பிலிருந்து பற்றறிகளை எடுத்து வருவதற்கு தடைவிதித்தமை காரணமாகவும் இப்புதிய முறையை மக்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்படி டைனமோவில் இரு வயர்கள்பொருத்தப்பட்டு அதன் மறுமுனைஇரண்டையும் வானொலியில் பொருத்திய பின் ஒருவர் சைக்கிள் சில்லைச் சுற்ற வானொலிஇயங்குவதைக் காணமுடிகிறது. (71)

# பனடோல் விலை அதிகரிப்பு

(மானிப்பாய்)

பனடோலின் விலை, குடாநாட்டின் சில கடைகளில் 75 சதமாக கூடியவிலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

சாதாரண தலைவலிக்குப் பாவிக்கும் இவ்வில்லை முன்னர் 50 சதமாக விற்பனைசெய்யப்பட்டுவந்தது தெரிந்ததே. (71)

## நவ. 11ல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். ஏற்கனவே நிர்ணயித்ததுபோல் திரு. குஜ்ராலின் விஜயம் அமையுமென்றும் அவர் தெரிவித்தார்.

திரு குஜ்ரால், தமது விஜயத்தின்போது பிரதமர் திரு. வி. பி. சிங்கின் முக்கிய கடிதம் ஒன்றையும் ஜனாதிபதி திரு. பிரேமதாசாவிடம் கையளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலினால் மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

கடற்படையினரின் இடைவிடாத பிரங்கித் தாக்குதல்களினால் மாதகல் பகுதிகளில் உள்ள குடும்பங்கள் இடம்பெயர்ந்து யாழ். நகருக்கு வந்துள்ளனர்.

தினமும் அதிகாலையிலும், இரவு நேரங்களிலும் மாதகல் பகுதியில் பொதுமக்கள் இருக்கும் இடங்களை நோக்கிக் கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்வதால் பல வீடுகள் சேதமடைந்ததுடன் பொதுமக்கள் பலரும் காயமடைந்துள்ளனர்.

மாதகல் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். நகர் வந்துள்ள அகதிகள் பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். (வி)

## இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல மினிபஸ் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரின் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு நல்லூர் சாதனாபாடசாலையில் நடைபெறவிருக்கிறது. (153)

## ஏழாவது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

மயிலிட்டி கிராமக் கோட்டடிப் பகுதிமால் சாந்தைச் சந்தியை அடைந்த ஸ்ரீலங்கா இராணுவத்தில் ஒரு பகுதி, சாந்தைச் சந்தியில் தரித்து நிற்க, மீதி இராணுவம் வீமன்காமம் ஊடாக மாவிட்டபுரத்திற்கு வந்தது.

இதேவேளை, சாந்தைச் சந்தியில் நிலைகொண்டிருந்த இராணுவம் மீது, புலிகள் எதிர்பாராத கடும் தாக்குதலை மேற்கொண்டபோதே இராணுவத் தரப்பில் பெருமளவில் சேதம் ஏற்பட்டதாகவும், அவர்கள் நிலைகுலைந்து போயுள்ளதாகவும் தெரியவருகிறது.

பல பகுதிகளிலும் இருந்து வெளியேறிய இராணுவத்தினர், காங்கேசன்துறை முகாமுக்குச் செல்ல முயல்வதாயும், புலிகள் மயிலிட்டி-காங்கேசன்துறை வீதியில் வழிமறித்துக் கடும் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய மோதலில் புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணம் அடைந்தார். (86-வி)

# அயோத்தி நகருக்கு இராணுவம் விரைவு

(புதுடில்லி)

ராம ஜன்மபூமி பாப்ரி மசூதி சர்ச்சை பூதாகரமாக உருவெடுத்துள்ளதையடுத்து அயோத்தி நகருக்கு பெருமளவு இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நகரின் சகல வழிகளும் அடைக்கப்பட்டுமுள்ளது.

இம் மாதம் 30-ம் திகதி ராமர் ஆலய கட்டுமாணப் பணியை ஆரம்பிக்கப்போவதாக பாரதீய ஜனதாகட்சி அறிவித்துள்ளதையடுத்தே அங்கு எழும் சகல பிரச்சனைகளையும் கருத்தில் கொண்டு இராணுவத்தை அரசுஅனுப்பியுள்ளது.

இம்மாதம் 30ம் திகதிக்குப் பின் தமக்கு சாதகமான முடிவு கிடைக்காவிடில் தேசிய முன்னணி அரசுக்கு வழங்கி வரும் ஆதரவை தாம் உடனடியாக நீக்கிக்கொள்ளப் போவதாவும் பாரதிய ஜனதாகட்சி எச்சரித்துள்ளதையடுத்து ஆட்சி கவிழும் அபாயமும், தாம் பதவியிலிருந்து விலகத் தயாரென பிரதமர் திரு. சிங் அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## வடக்கு கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி

ணுவத் தாக்குதல் குறித்து உடனுக்குடன் தெரிந்துகொள்ளும் இவர்கள் தமது உறவினர்கள் நிலைபற்றி அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் உணவுப்பொருள் தட்டுப்பாடு குறித்து அறிந்து கொண்டவர்கள் உறவினர்களுக்கு பணம் அனுப்பி வைத்துள்ளபோதிலும் அவை அவர்களின் கைக்கு இதுவரையும் கிடைக்கவில்லையாம்.

கடிதங்கள் மூலம் இங்குள்ள நிலைபற்றி உறவினர்களுடன் தொடர்பு கொண்டபோதும் பதில் கடிதங்கள் எதுவும் தமக்கு கிடைக்கவில்லையென கவலை தெரிவித்தார்கள்.

இக்கடிதங்கள் எப்போது வரும் என்று தினமும் தாம் காத்திருப்பதாக மத்திய ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் தெரிவித்தனர். (து)

## நூறு இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குரும்பசிட்டி, காங்கேசன்துறை, சுன்னாகம், தெல்லிப்பழை, மல்லாகம், கீரிமலை, மாவிட்டபுரம், உரும்பராய் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விமான தாக்குதலில் சுமார் 90 வீடுகள் முற்றாக நாசமடைந்துள்ளனவாம்.

இப்பகுதியில் இடம்பெற்ற விமான. ஷெல் தாக்குதல்களின் போதே 30 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனவாம்.

இத்தாக்குதலில் சுமார் 4,000 படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடந்த ஆறு நாள் தாக்குதலில் பாதுகாப்பு அமைச்சுக்கு ஏழு கோடி ரூபாவரை செலவாகியிருப்பதாகவும் படையினருக்கு எதிர்பாராதளவில் பெருமளவு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அச்செய்தி குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தரப்பிலும் பெருமளவு சேதம் ஏற்பட்டிருக்கலாமென்றும் அச்செய்தி தெரிவித்தது. (சி)

## அப்பாவிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த யுத்தத்தில் பொதுமக்கள் அதிக அளவில் கொல்லப்படுவது வருந்தத்தக்கதாகுமென்றும் அக்கவலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பொதுமக்கள் பல்வேறு வகையிலும் அரசபடைகளால் கொல்லப்படுவதும், அது குறித்து ஒவ்வொரு தடவையும் இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவிப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி(

## வடக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பனங்களுடனும் உடனுக்குடன் தொடர்புகொண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக ஆஸ்திரேலியா. பிரிட்டன், கனடா, சுவிஸ் போன்ற நாடுகள் அதிக அக்கறை செலுத்திவருவதும்குறிப்பிடத்தக்கது. (சி)

## நேற்று

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதிகளில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்றுக் காலை முதல், வை-12, அவ்ரோ, பொம்மர் ஆகியன மாறிமாறி வந்து காங்கேசன்துறை, மாவிட்டபுரம், பன்னாலை, கொல்லங்கலட்டி, கீரிமலைப் பகுதிகளில் குண்டுகளைப் பொழிந்தன. அரியாலை, கைதடி, நாவற்குழியில் பொம்மர் குண்டுகளை வீசியது.

வீமன்காமம், தையிட்டி, தெல்லிப்பழைப் பகுதிகளிலும் குண்டுகள் வீசப்பட்டன. பெருமளவு சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (86)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.